# குடியாத்தம் நகராட்சி

## 2019-2020-ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கை

குடியாத்தம் நகராட்சி 1886-ஆம் ஆண்டு மூன்றாம் நிலை நகராட்சியாக நிறுவப்பட்டது. பின்னர் இரண்டாம்நிலை நகராட்சியாக உயர்வு செய்யப்பட்டு 1973 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 27-ஆம் தேதி வரை வளர்ச்சி உள்ளாட்சித்துறை அரசாணை எண்.143, நாள்:25.01.1973-ன்படி 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28-ஆம் தேதி "முதல்நிலை" நகராட்சியாக உயர்வு பெற்று இயங்கி வருகிறது.

I. அமைப்பும் மேலாட்சியும்:-

1. ஆட்சிஎல்லை :-

இந்நகராட்சியின் பரப்பளவு 4.92 சதுர கிலோ மீட்டர்கள் ஆகும். எல்லையில் அறிக்கையாண்டில் யாதொரு மாறுதலும் செய்யப்படவில்லை.

இந்நகராட்சியின் மக்கள் தொகை 1991-ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 83,232 ஆகும். 2001-ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 91,452 ஆகும். 2011-ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்நகராட்சயின் மக்கள் தொகை 91558 இதில் ஆண்கள் 45,135, பெண்கள் 46,423 ஆகும்.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை 15,479 இதில் ஆண்கள் 7,493 மற்றும் பெண்கள் 7,986 ஆகும். 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகையினை அடிப்படையாக கொண்டு வார்டுகள் திருப்திகரமாகவும் நிர்வாகத்திற்கு வசதியாகவும் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

## 2) தலைவர் மற்றும் உறுப்பினகள்:-

24.09.2016-வுடன் நகரமன்ற தலைவர் பதவி காலம் முடிவு பெற்றதால் 25.10.2016 முதல் அரசாணை (பல்வகை) எண்.146, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்:24.10.2016 இல்தனி அலுவலர் நியமனம் செய்து அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி 01.04.2019 முதல் 16.05.2019 வரை திரு.எஸ்.செல்வபாலாஜி, ஆணையாளர் தனி அலுவலராகவும், 17.05.2019 முதல் 26.06.2019 வரை திருமதி.ஞா.உமாமகேஸ்வரி, பொறியாளர் மற்றும் ஆணையாளர் பொறுப்பு தனிஅலுவலராகவும், 27.06.2019 முதல் 18.08.2019 வரை திரு.டி.சௌந்தரராஜன், ஆணையாளர் பொறுப்பு தனிஅலுவலராகவும் பதவி வகித்தனர். மேலும், 19.08.2019 முதல் திரு.எச்.இரமேஷ், ஆணையாளர் தனிஅலுவலர் பதவி வகித்து வருகிறார்.

### அ) நகரமன்ற கூட்டங்கள்:-

அறிக்கையாண்டில் தனி அலுவலர் தலைமையில் 01.04.2019 முதல் 31.03.2020 வரை 10 சாதாரண கூட்டங்கள் மற்றும் 3 அவசர கூட்டங்கள் ஆகமொத்தம் 13 கூட்டங்கள் நடைப்பெற்றது. இக்கூட்டங்களில் முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை 168 ஆகும்.

### ஆ) நியமனக்குழுகூட்டங்கள்:-

25.10.2016 முதல் தனி அலுவலர் நியமனக்குழுவின் தலைவராக உள்ளார். அறிக்கையாண்டில் இரண்டு நியமனக்குழு கூட்டங்கள் நடைப்பெற்றது.

### இ) ஒப்பந்தக்குழு:-

1. 25.10.2016 முதல் தனிஅலுவலர் ஒப்பந்தக்குழுவின் தலைவராக உள்ளார். அறிக்கையாண்டில் கூட்டங்கள் நடைபெற்றுள்ளது.
2. நிரையிடல் குழு 08.03.2020 முதல் தனி அலுவலர், பொறியாளர், நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோரை கொண்டு குழு அமைக்கப்பட்டு அறிக்கையாண்டில் 5 கூட்டங்கள் நடைப்பெற்றுள்ளது.

3. வழக்குகளும் சட்ட செலவுகளும்:-

அறிக்கையாண்டில் ரூ.20,000/- வழக்குகள் கட்டணமாக செலவாகியுள்ளது. இது கடந்த ஆண்டு ரூ.90,000/- செலவாகியுள்ளது.

4. **ஆணையாளர்கள்:-**

அறிக்கையாண்டில் கீழ்க்கண்டவாறு ஆணையாளர்கள் பணிபுரிந்து உள்ளனர்.

| வ. எண் | நகராட்சி ஆணையாளர் பெயர் திரு/திருமதி | முதல் | வரை |
|---|---|---|---|
| 1 | எஸ்.செல்வபாலாஜி | 04.04.2018 | 16.05.2019 |
| 2 | ஞா.உமாமகேஸ்வரி | 17.05.2019 | 26.06.2019 |
| 3 | டி.சௌந்தரராஜன் | 27.06.2019 | 18.08.2019 |
| 4 | எச்.இரமேஷ் | 19.08.2019 | 31.03.2020 |

அறிக்கையாண்டில் கீழ்க்கண்டவாறு அலுவலர்கள் பணிபுரிந்து உள்ளனர்.

| வ. எண் | நகராட்சி அலுவலர்கள் பெயர் திரு/திருமதி | முதல் | வரை |
|---|---|---|---|
| 1 | ஞா.உமாமகேஸ்வரி, பொறியாளர் | 01.04.2019 | 31.03.2020 |
| 2 | இரா.சூரியபிரகாஷ், மேலாளர் | 01.04.2019 | 31.03.2020 |
| 3 | கு.தமிழரசு, கணக்கர் | 01.04.2019 | 31.03.2020 |
| 4 | எம்.தமிழ்செல்வன், துப்புரவுஅலுவலர் | 01.04.2019 | 31.03.2020 |
| 5 | அ.வெங்கடேசன், நகரமைப்புஆய்வர் | 01.04.2019 | 31.03.2020 |

**5) நகரமன்ற பொறியாளர்:-**

01.04.2019 முதல் 31.03.2020 வரை திருமதி.ஞா.உமாமகேஸ்வரி பொறியாளராக பணிபுரிந்து வருகிறார்.

**6) நெடுஞ்சாலைகள்:-**

| | | |
|---|---|---|
| 1. காட்பாடி | - | வெங்கட்டகிரி கோட்டை சாலை |
| 2. சித்தூர் | - | பலமநேரி சாலை |
| 3. பேர்ணாம்பட்டு | - | ஆம்பூர் சாலை |
| 4. வேலூர் | - | பள்ளிகொண்டா சாலை |
| 5. மேல்பட்டி | - | கடாம்பூர் சாலை |

மேற்படி சாலைகள் நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி சாலைகள் தூசி இல்லா தார்தளம் போடப்பட்டுள்ளது.

அறிக்கையாண்டில் நகராட்சியினரால் பராமரிக்கப்பட்ட சாலைகள் விவரம் வருமாறு

| | | |
|---|---|---|
| 1. சிமெண்ட் சாலை | - | 23.582 கி.மீ |
| 2. தார்தளம் | - | 63.598 கி.மீ |
| 3. மண்சாலை | - | 8.380 கி.மீ |
| மொத்தம் | - | 97.060 கி.மீ |

சாலை பாமரிப்பிற்கான அறிக்கையாண்டில் ரூ.463.30/- இலட்சம் செலவிடப்பட்டது. கடந்த ஆண்டு சாலை பராமப்பிற்காக செலவிடப்பட்டத் தொகை ரூ. 387.74/- இலட்சம் ஆகும்.

**7) பாலங்கள், நடைபாதைகள் மற்றும் மதகுகள்:-**

இந்நகராட்சியில் நடுவே உள்ள கவுண்டன்ய ஆற்றில் தரைபாரம் ஒன்று மக்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக உள்ளது.

நகரின் நடுவே உள்ள மிகப்பெரிய பாலம் "காமராஜர் பாலம்" செவ்வனே நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்பட்டு போக்குவரத்திற்கு மிகவும் பயன் உள்ளதாக உள்ளது.

**<u>8) பயணியர் விடுதி:-</u>**

மேற்படி கட்டிடம் போக்குவரத்து காவல் துறையினருக்கு வாடகை விடப்பட்டுள்ளது.

**<u>9) சத்திரங்கள் மற்றும் தண்ணீர் பந்தல்கள்:-</u>**

சத்திரங்கள் எதுமில்லை.

**<u>10) விளக்கு வசதிகள்:-</u>**

அறிக்கையாண்டில் நகரத்தின் மொத்தம் 2579 மின் விளக்குகள் இருந்தன.

**<u>மின்விளக்கு விவரம் வருமாறு 2010-2011:-</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | நான்கு அடி குழல் விளக்குகள் | - | 1709 எண்ணிக்கை |
| 2. | LED விளக்குகள் | - | 842 எண்ணிக்கை |
| 4. | உயர்மின் கோபுர விளக்குகள் | - | 28 எண்ணிக்கை |
| | மொத்தம் | - | 2579 எண்ணிக்கை |

தெருவிளக்குகள், மின் பணியாளர்களைக் கொண்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் மின்சார வாரியத்திற்கு செலுத்திய தொகை ரூ.35.40/- இலட்சம் சென்ற ஆண்டு மின்சார வாரியத்திற்கு செலுத்திய தொகை ரூ.40.68/- இலட்சம்.

**<u>11) பொது சுகாதாரம்:-</u>**

ஒரு துப்புரவு அலுவலர், ஒரு துப்புரவு ஆய்வர் மற்றும் எட்டு துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்கள் அறிக்கையாண்டில் பணியாற்றினர்.

இவர்களுக்கான அறிக்கையாண்டில் ரூ.49,66,224/- செலவிடப்பட்டது. இச்செலவு கடந்த ஆண்டு ரூ.38,31,444/- ஆகும்.

**12) நலமுறை விளம்பரம்:-**

நோய் தடுப்பு பணி பற்றி பொது மக்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது. படக்காட்சிகள் மற்றும் துண்டு பிரச்சுரங்கள் மூலம் விளம்பரம் செய்யப்பட்டது.

**13) பிறப்பு, இறப்பு, மகப்பேறு உதவி 2019-20:-**

பிறப்பு, இறப்பு பதிவுகள் இந்நகராட்சியில் துப்புரவு ஆய்வாளர் மூலம் பதிவு செய்யப்பட்டு வருகிறது

அறிக்கையாண்டில் பதிவான பிறப்பு - 127 ஆகும்

அறிக்கையாண்டில் பதிவான இறப்பு - 485 ஆகும்

அறிக்கையாண்டில் இந்நகராட்சி எல்லையில் அரசு தொடக்க பள்ளிகள் 16-ஆம் அரசு நிதி உதவி பெறும் தனியார் பள்ளிகள் 8 ஆகும். மேலும், இந்நகராட்சி எல்லையில் ஐந்து மேல்நிலைப் பள்ளிகளும் இரண்டு உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளது. பள்ளிகள் எதுவும் நகராட்சியால் நிர்வகிக்கப்படவில்லை. கட்டிடங்கள் மற்றும் தளவாட சாமான்கள் மட்டும் 17 பள்ளிகளில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**14) மேல்நிலைப்பள்ளி:-**

**நகராட்சி மேல்நிலைப்பள்ளி கல்வித்துறை நிர்வாகத்தின் கீழ் உள்ளதால் நடப்பு ஆண்டில் நகராட்சியிலிருந்து செலவினமும் இல்லை.**

15) பொது நூலகங்கள்:-

**பொது மக்களின் வசதிக்காக தனியார் நூலகங்கள் பொது மக்களால் நடத்தப்பட்டு வருகிறது.**

16) மகப்பேறு:-

**தற்போது இந்நகராட்சியில் மகப்பேறு திட்டம் செயல்முறையில் இல்லை.**

17) பெரியம்மை:-

**அறிக்கையாண்டில் பெரியம்மை நோய் முகாம் ஏதும் நடைபெறவில்லை.**

18) யாணைக்கால் நோய் தடுப்பு திட்டம்:-

**இத்திட்டத்தின் கீழ் ஆறு மருந்து தெளிக்கும் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்களின் பணிகளை துப்புரவு ஆய்வாளர் கூடுதலாக கவனிந்து வந்தார். களப்பணி உதவியாளர் 25.02.2010 முதல் பணியாற்றி வருகிறார். நகரில் கொசு மருந்து 36 வார்டுகளுக்கு மருந்து தெளிக்க வார்டு ஒன்றுக்கு ஒன்று வீதம் 36 கொசு தெளிப்பான்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கொசு ஒழிப்பிற்காக Pythirim, Abate, 500 கிலோ பயோடெக் பவுடர் மருந்து ரூ.15,00,000/- பயன்படுத்தப்பட்டு வருகிறது.**

19) துப்புரவு:-

**அறிக்கையாண்டில் 8 கழிப்பிடங்கள் மற்றும் சுகாதார வளாகங்கள் பராமரிக்கப்பட்டு வந்தன. தெருக்களில் விழும் குப்பை கூளங்கள் சேகரிக்கப்பட்டு லாரிகள், கம்பெக்டர், டம்பர் பிளேசர் 1 மூலமாகவும் உரக்கிடங்கிற்கு எடுத்து செல்லப்பட்டது. லாரிகள்**

மற்றும் பழுதடைந்த தள்ளுவண்டிகள் ஏலம் விட நடவடிக்கையில் உள்ளது. குப்பை கூளங்களை அகற்றுவதற்கு 34 மின்கலனில் இயங்கும் தள்ளுவண்டிகள் உபயோகத்தில் இருந்து வருகிறது.

இந்நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு தளவாட சாமான்கள் மற்றும் கம்பூட்ஸ், கையுறை, காலனிகள், முகவுரை மற்றும் சீருடை வழங்கப்பட்டது.

அறிக்கையாண்டில் துப்புரவு பணியாளர்களுக்கு என செலவிடப்பட்ட தொகை ரூ.411.77/- இலட்சம் ஆகும். கடந்த ஆண்டு துப்புரவு பணியாளர்களுக்கு என செலவிடப்பட்ட தொகை ரூ. 325.66/- இலட்சம் ஆகும்.

20) <u>உரம்:-</u>

சேகரிக்கப்படும் குப்பைகள் பிரித்தெடுக்கப்பட்டு வருகிறது. இதற்கென மூன்று துப்புரவு பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். குப்பைகள் உள்ளி என்ற கிராமத்தில் உள்ள உரகிடங்கில் சேமிக்கப்பட்டு வருகிறது. புதிய உரக்கிடங்கிற்கான இடம் செட்டிக்குப்பம் மற்றும் எர்த்தாங்கல் கிராமத்தில் ஏக்கர் பரப்பளவில் ரூ.4.32/- இலட்சம் செலவில் 22.09.2009 இல் வாங்கப்பட்டது.

21) <u>உணவுப் பொருள் கலப்படம்:-</u>

உணவுப்பொருள் கலப்பட தடுப்பு சட்டத்தின் கீழ் உணவு கலப்பட கட்டுப்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. பயிற்சி பெற்ற உணவு ஆய்வாளர் எவரும் இல்லை.

22) ஆடுவதை சாலை:-

நகராட்சிக்கு சொந்தமான ஆடு அறுக்கும் கூடம் நவீன முறையில் கட்டப்பட்டு நல்ல நிலையில் இயங்கப்பட்டு வருகிறது.

23) சத்துணவு:-

குடியாத்தம் நகராட்சியின் கட்டுப்பாட்டில் புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டம் 17 பள்ளிகளில் செயல்படுத்தப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை உள்ள பள்ளிகள் | - | 15 |
| 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை உள்ள பள்ளி | - | 1 |
| 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள பள்ளி | - | 1 |
| மொத்தம் | - | 17 |

சத்துணவு பணிக்காக 17 மையங்களில் பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

| | | | |
|---|---|---|---|
| அமைப்பாளர் | - | 17 | (காலியிடம்) |
| சமையலர் | - | 17 | (காலியிடம்) |
| சமையல் உதவியாளர் | - | 17 | (காலியிடம்) |
| மொத்தம் | - | 51 | |

மேற்கண்ட 17 மையங்களில் பள்ளி நாட்களில் 742 மாணவ மாணவியர் மற்றும் விடுமுறை நாட்களில் மாணவ மாணவியர்களும்

சத்துணவு உண்ணுகின்றனர். பள்ளி மாணவர்களுக்கு தரமான முறையில் சத்துணவு செய்து தரப்படுகின்றது.

வாரத்தில் திங்கள் முதல் வெள்ளி வரை ஐந்து தினங்களுக்கு உணவுடன் முட்டை வழங்கப்படுகிறது. மேலும் செவ்வாய் அன்று பச்சை பயிறு மற்றும் கொண்டகடலை சுண்டலாக செய்து ஒரு மாணவருக்கு 20 கிராம் வழங்கப்படுகின்றது.

வெள்ளிக்கிழமை அன்று உருளைக்கிழங்கு வேகவைத்து 1 மாணவருக்கு 20 கிராம் வீதம் வழங்கப்படுகின்றது.

24) மின்னாளுமை (E-goverance):-

இந்நகராட்சியில் 2019-20 ஆம் ஆண்டு பொது நிதி மூலம் ரூ.07.09/- இலட்சம் விலையின் அடிப்படையில் கணினிகள் Catridge-கள் அலுலவக பயன்பாட்டிற்கு வாங்கப்பட்டது.

பொறியாளர், துப்புரவு ஆய்வாளர், கணக்கர், வருவாய் ஆய்வாளர், இ2 இளநிலை உதவியாளர் தனியாக கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் வைக்கப்பட்டு Local Area Network மூலம் சர்வர் கணினியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், இளநிலை உதவியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் ஆகியோர்க்கு தனியாக கணினிகள் மற்றும் Laserjet Printer-கள் வழங்கப்பட்டுள்ளது. Website-இல் Works Details Upload செய்யவும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் சொத்துவரி, தண்ணீர் கட்டணம், கடை வாடகை மற்றும் வரியில்லா இனங்கள் ஆகிய அனைத்திற்கும்

**கணினிகள் மூலம் இரசீதுகள், பிறப்பு, இறப்பு சான்றுகள் வழங்கப்பட்டு வருகின்றது.**

25) அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க வணிகங்கள்:-

**அறிக்கையாண்டில் நகராட்சிக்குட்பட்ட எல்லா அச்சம் மற்றும் அருவருப்பு வணிகங்களும் உரிமையாணை வழங்கப்பட்டது. அறிக்கை ஆண்டில் உரிமையாணைக் கட்டணத் தொகை ரூ.49,14,428/- வசூலிக்கப்பட்டது. சென்ற ஆண்டு வசூலிக்கப்பட்டது ரூ.3,19,875/-**

26) சந்தைகளும், திருவிழாக்களும்:-

இந்நகராட்சியில் ஒரு வாரசந்தை உள்ளது. ஸ்ரீகெங்கையம்மன் திருவிழா வைகாசி 1-ஆம் தேதி சிறப்பாக நடைப்பெற்றது. இவ்விழாவிற்கு மாவட்ட அளவிலான விடுமுறை வழங்கப்பட்டது. இதற்காக ரூ. 2.80/- இலட்சம் செலவிடப்பட்டது. கடந்த ஆண்டு ரூ. 2.64 /- இலட்சம் ஆகும்.

**27) குடிநீர் விநியோகம்:-**

நகரத்தில் ஏற்கனவே உள்ள குடிநீர் திட்டம் நகர மக்களுக்கு போதுமானதாக இல்லாததாலும் தற்போது காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தில் இந்நகராட்சி சேர்க்கப்பட்டுள்ளதால் திட்டம் முடிவடையும் பொழுது நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 135 LPCD வீதம் குடிநீர் வழங்க இயலும்.

மேலும், நகரில் குடி தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய இந்திய மார்க் **ஆழ்த்துளை கிணறு கைப்பம்புகளில் 142 எண்ணிக்கை பராமரிக்கப்பட்டு வருகிறது மற்றும் 410 மினி பவர் பம்பு மூலம் குடிநீர் வழங்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.**

நகரில் மொத்தம் பொதுக் குழாய்கள் உள்ளது. இவற்றில் குழாய்கள் இரட்டை குழாய்களும் குழாய்கள் ஒற்றைக் குழாய்களுமாகும்.

இந்நகரில் வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வீடுகளுக்கு கொடுக்கப்பட்டு இருந்தன. இதில் வீட்டு உபயோகத்திற்கு குழாய் இணைப்புகளும் மற்றும் வீட்டு உபயோகமில்லா காரணத்திற்காக குழாய் இணைப்புகளும் இருந்தன. அறிக்கையாண்டில் இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டது. ஒவ்வொரு நபருக்கும் 90 லிட்டர் தண்ணீர் வழங்கப்பட்டது.

அறிக்கையாண்டில் நீர் அளிப்பு தலைப்பின் கீழ் பராமரிப்புச் செலவு ரூ.224.19/- இலட்சம்

28) பொது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு:-

இந்நகராட்சியில் தீ அணைப்பு திட்ட நிலையம் ஏதும் பராமரிக்கப்படவில்லை. அரசினால் தீயணைப்பு நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

29) வருவாய் தரும் இனங்கள்:-

குறைந்த வருவாய் உள்ளவர்களுக்காக வீடுகள் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இவற்றில் குடியிருப்புக்கு நகராட்சி ஊழியர்களுக்கு குடியிருப்பவர்களுக்கே 01.10.1980-ஆம் தேதிய 1738 எண் அரசாணையில் அனுமதிக்கப்பட்டு கிரயம் செய்து மேற்படி கிரயத் தொகையை ஊழியர்களின் சம்பளத்தில் பிடித்தம்

**செய்யப்பட்டது. மற்ற வீடுகளுக்கு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது.**

**நகராட்சி ஆணையாளர், பொறியாளர் ஆகியோர்களுக்கு குடியிருப்பு வீடுகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.**

30) வளர்ச்சிப் பணிகள் 2019-2020:-

**அறிக்கையாண்டில் அரசிடமிருந்து நிதியுதவி வரப்பெற்ற கீழ்க்கண்டவாறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு பெரும்பாலான பணிகள் முடிக்கப்பட்டும் சிலப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.**

## நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் - 2018-19

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடுதொகை (ரு.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Providing BT Surface and CC Paver Block with Drain to Zubedha Nagar, Gosha Gulamudeen Street, Janumiyan Street, Asanalipet, Bharathiyar Street, V.P.Kovil Street, Kaspa Pudumanai, Sakthi Nagar, Thangala Ramasamy Street, Asan Street, Neeli Govindappan Street, JC Street, S.Kuppannan Street, Raja Nagar, Teacher's Colony, Sathya Nagar, R.S.Nagar, Arunachalam Nagar, Arun Nagar, Nehruji Nagar 1st&2nd Street, Lakshmi Garden in Ward No.1,2,5,7,8,9,10,11,12,13&14 | 250.00 |
| 2 | Providing BT Surface and CC Paver Block with Drain to Viswanathan Nagar, Sedukkarai Perumal Kovil Street, OM Sakthi Street, Raja Ganapathy Nagar, Undiyal Dharmaiyan Street, Mannadi Ramasamy Street, Gandhi Road, Rajendira Singh Street, Gowdanya Causeway and Melpatti Road, Gangai Amman Nagar, Siddhi Vinayagar Kovil Street, NSK Nagar main Road, Sannathi Street, Sannathi Thoppu Street, Match Factory Thoppu Street, Andiyappa Mudali Street(Vavval Thoppu) Periyar Nagar, Bosepet Newt Street, Narayanasamy Thoppu Street, Thangam Nagar, Thiruvalluvar Vinayagar Kovil Street, Nethaji Street, Periyappu Mudali Street Lane and Bhuvaneswari Nagarin Ward No.3,9,14,15,16,17,22,23,24,26,28,29,30,32, 33,34,35,&36 | 250.00 |

## நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் - 2019-20

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடுதொகை (ரு.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Providing BT Surface and CC Paver Block with Drain to Achudhanada Samy Street, Kaspa Ambedkar Street, Kaspa Arasamara Cross Street, Kotta Suubaiyah Street, Sungu Seetharaman Street, Poola Singarayan Street, Pathapalli Munisamy Street, Thalayari Munisamy Street, LIG Colony&Arunthathiyar Colony, Arunachalam Nagar, Kavarai Street, Mappannan Murugappan Street, Vaitheeswaran Nagar 2nd Main Road&Cross Street 1to9, Nehruji Naga VOC Street, Nehruji Nagar Kambar Street, VOC Street in Ward No.4,7,8,9,10,12,13,14&21 | 250.00 |

| | | |
|---|---|---|
| 2 | Providing BT Surface and CC Paver Block with Drain to Ashok Nagar 5&6$^{th}$ Joint Cross Street, Parasuraman Street, Pudhupet Pillaiyar Kovil Street, Pandara Muthaiyan Street, Chinna Mudali Street, Rasi Arunachalam Street, Bhudhar Nagar-Puthu mania, Seruvanki Colony, Kamatchiamman Nagar, Bosepet Main Road, Pachaiyamman Kovil Street, Varathappan Street, Sandhai Maithanam, Melpatti Road Junction, Sivagamiyamman Street Lane 1&2 in Ward No.15,16,19,23,29,30,31,32,33,35&36 | 250.00 |

## 14-வது நிதிக்குழு திட்டம் - 2019-20

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடுதொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Providing BT Surface with Drain to Pasumathur Head Works Road, Vathieeswaran Nagar Main Road in Ward No.14 | 41.00 |
| 2 | Providing Paver Block with Drain to Rajilpatti Lane (Muthumariyamman Kovil), NGO Colony, R.V.Gopal 3$^{rd}$ Street, Kavarai Street Lane, PATC Depot Lane Street, Sathu Bajanai Kovil Street, Sengunthar Mandapam Opp in Ward No.11,12,13,14,32&35 | 41.00 |
| 3 | Providing BT Surface with Drain to Kondasamuthiram Street, Nari Kullappan Street, Kaspa Hostel Back Side in Ward No.7,11&14 | 50.00 |
| 4 | Providing BT Surface with Drain to Variyar Nagar, Kallapadi Kandhappan Street in Ward No.14&32 | 43.60 |
| 5 | Providing BT Surface with Drain to APM Mahal (Raja Ganapathi Nagar) & Ambedkar Nagar, Perumal Nagar, Azhagu Perumal Kovil Street in Ward No.10&14 | 47.60 |
| 6 | Providing BT Surface with Drain to Kosa Annamalai Street, Mandaveli Periya thambi Street, Congress House Road, Melpatti Road to Tharai Palam in Ward No.17,18,20&35 | 44.80 |
| | மொத்தம் | **268.00** |

## சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டம் - 2019-20

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடுதொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | குடியாத்தம் நகராட்சி வார்டு எண்.01 சுபேதார் நகரில் அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் | 9.55 |
| 2 | குடியாத்தம் நகராட்சி வார்டு எண்.30 சந்தப்பேட்டையில் DI பைப்லைன் அமைத்தல் | 1.50 |
| 3 | குடியாத்தம் நகராட்சி வார்டு எண்.16 சுண்ணாம்புபேட்டை பெரியார் சிலை அருகில் LED (10No's) தெரு விளக்குகள் அமைத்தல் | 4.00 |
| 4 | குடியாத்தம் நகராட்சி வார்டு எண்.30 சந்தப்பேட்டையில் காரிய மேடை அமைத்தல் | 6.00 |
| 5 | குடியாத்தம் நகராட்சி வார்டு எண்.16 குடியாத்தம் சுண்ணாம்புபேட்டையில் எரிமேடை அருகாமையில் காரிய மேடை அமைத்தல் | 6.00 |
| 6 | குடியாத்தம் நகராட்சி வார்டு எண்.28 நெல்லூர்பேட்டை கரும்புலீஸ்வரர் கோவில் அருகில் LED மின்விளக்குகள் (10 No's) அமைத்தல் | 5.00 |
| 7 | குடியாத்தம் நகராட்சி வார்டு எண்.24 கோபாலபுரம் பகுதியில் புதிய உடற்பயிற்சி அரங்கம் கட்டுதல் | 4.00 |
| 8 | குடியாத்தம் நகராட்சி வார்டு எண்.9 காரிய மண்டபம் அமைத்தல் | 3.50 |
| | மொத்தம் | **39.55** |

## ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் - 2018-19

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடுதொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Providing BT Surface and CC Paver Block with Drain to Ward No.1,2,3,4,5,6,7,8,9,11&12 | 117.60 |
| 2 | Providing BT Surface and CC Paver Block with Drain to Ward No.13,14,15,16,17,18,19,20,21,22&23 | 112.00 |
| 3 | Providing BT Surface and CC Paver Block with Drain to Ward No.14,25,26,27,28,29,30,31,33,34,35&36 | 143.00 |
| | மொத்தம் | **372.60** |

## தவணை முறை திட்டத்தில் குடிநீர் குழாய் இணைப்பு திட்டம் - 2018-19

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடுதொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Providing Water Supply Internal Plumbing works for HSC's in Gudiyatham Municipality (6550 Nos) | 230.00 |

## நிலையான நீர் பாதுகாப்பு திட்டம் (SuWaSeM) - 2018-19

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடுதொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Rain Water Harvesting Structure – Providing Rain Warer Harvesting arrangements @ Robinson Tank in Gudiyatham Municipality | 24.00 |

## இயற்கை இடர்பாடு வறட்சி நிவாரணம் - 2019

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடுதொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Providing Pipeline arrangments from Infiltration Well in Pasumathur Headworks | 10.00 |
| 2 | Replacement of Power Pump and Cable in Infiltration Well at Pasumathur Headworks | 10.00 |
| | மொத்தம் | **20.00** |

## தூய்மை இந்தியா திட்டம் (Bio-Mining) - 2018-19

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடுதொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Rain Water Harvesting Structure – Providing Rain Warer Harvesting arrangements @ Robinson Tank in Gudiyatham Municipality | 725.00 |

## தூய்மை இந்தியா திட்டம் (FSTP) - 2018-19

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடுதொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Construction of 30 KLD Fecal Sludge Treatment Plant in Ulli Compost Yard | 320.00 |

## தூய்மை இந்தியா திட்டம் (MCC) - 2018-19&2019-20

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடுதொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Providing MCC Centre @Commissioner Quarters | 51.50 |
| 2 | Providing MCC Centre @ Bodipet | 51.50 |
| 3 | Purchase of 13 Nos BOV | 23.40 |
| 4 | Purchase of 19 Nos BOV | 34.20 |
| 5 | Purchase of 6 Nos LCV | 33.60 |
| 6 | Purchase of Mini Excavator | 23.00 |
| | மொத்தம் | **217.20** |

31) சந்தை மற்றும் கடைகள்:-

**அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் ஒரு தினசரி சந்தையும், ஒரு வாரச்சந்தையும் பராமரிக்கப்பட்டு வந்தது.**

**இதன் மூலம் அறிக்கையாண்டில் ரூ.6,33,055/- வரவாகும், கடைகளில் வாடகை தண்டல் உரிமை தவிர சந்தைகளின் கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு வழக்கம் போல் பொது ஏலம் விடப்பட்டது.**

**வீரபத்திரன் தெரு 15 கடைகளும், ஐயுடிபி கடைகள் வீரபத்திரன் தெரு, காம்பளக்ஸ் 13 கடைகளும், ஜே.கே.தெருவில் 17 கடைகளும், மேற்கு குளக்கரையில் 24 கடைகளும், அரசு மருத்துவமனை சாலையில் 3 கடைகளும், நகராட்சி அலுவலகத்தை சுற்றியுள்ள**

பழைய 18 கடைகளும், தென்குளக்கரையில் 24 கடைகளும், அண்ணா தெருவில் 12 கடைகளும், சந்தப்பேட்டை வார கால்நடை சந்தையில் 10 கடைகளும், தாழையாத்தம் பஜாரில் 5 கடைகளும் அறிக்கையாண்டில் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

IDSMT திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட 140 கடைகள் ஏலம் விடப்பட்டு வாடகை வசூல் செய்யப்பட்டு வருகிறது.

அறிக்கையாண்டில் மூன்று ஆண்டுகள் குத்தகை 9 ஆண்டு முடிவடைந்த கடைகளுக்கு மண்டல கண்காணிப்பு குழுவில் வாடகை உயர்வு செய்து தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

அறிக்கையாண்டில் மேற்படி கடைகள், பங்க் கடைகள் மூலம் வருவாய் ரூ.52,36,857/- ஆகும். இது கடந்த ஆண்டு ரூ.61,67,423/- ஆகும்.

32) பேருந்து நிலையம்:-

அறிக்கையாண்டில் இந்நகராட்சியினால் இரண்டு பேருந்து நிலையங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

வட்டார போக்குவரத்து அலுவலர், வேலூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.அ2/29618/2012 நாள் 09.04.2018 பேருந்து நிலையத்திற்கும் 07.05.2018 முதல் 06.05.2021 வரை அங்கீகாரம் புதுப்பித்து உத்தரவிடப்பட்டுள்ளது. பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் போருந்துகளுக்கு சி பிரிவாக அங்கீகரித்து நாள் ஒன்றுக்கு ரூ.8/- ஆக வசூலிக்கப்பட்டு வந்தது.

பேருந்து ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.8/- ஆக கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு குத்தகைக்கு விடப்பட்டது. அறிக்கையாண்டில் வருவாய் ரூ.8,30,000/- ஆகும்.

**நகர பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்குமிடம், கட்டண கழிப்பறை ஆகியவைகளை பயணிகள் வசதிக்காக கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது. நடப்பு ஆண்டில் கட்டணம் கழிப்பறை வருவாய் ரூ.15,10,350/- ஆகும்.**

33) ஆடு அடிக்கும் இடம்:-

**அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் ஆடு அடிக்கும் சாலை ஒன்று பராமரிக்கப்பட்டு வந்தது. ஆடு ஒன்றுக்கு ரூ.20/- சுங்கம் நிர்ணயம் செய்யப்பட்டன. கட்டணம் தண்டல் உரிமை ஏலத்தில் விடப்பட்டது.**

**அறிக்கையாண்டில் ஆடு அடிக்கும் இடம் வருவாய் ரூ.3,83,000/- ஆகும்.**

34) மரம் நடுதலும் பூங்காக்களும்:-

**அறிக்கையாண்டில் 349 மரங்கள் பராமரித்து வரப்பட்டது. இதன் மூலம் அறிக்கையாண்டில் ரூ.75,000/- வருவாய் ஆகும்.**

35) நிலம் மேம்படுத்துதல்:-

**நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளர் ஒருவரும் இரண்டு சங்கிலியாளரும் அறிக்கையாண்டில் பணியாற்றி வந்தனர்.**

36) நகரமைப்புத் திட்டங்கள்:-

**குடியாத்தம் நகராட்சியில் அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்பு திட்டங்கள் (Approved Scheme) ஏதும் இல்லை. நகர் ஊரமைப்பு துணை**

**இயக்குநர் அவர்களால் புதிய திட்டங்கள் (New Scheme) தொடர்பாக புதிய திட்டங்கள் ஏதும் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படவில்லை.**

37) முழுமைத் திட்டம்:-

**குடியாத்தம் உள்ளூர் திட்டப் பகுதியினை நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அலுவலகத்தால் நில உபயோக அளவை மற்றும் மறு ஆய்வு செய்து அப்பகுதிக்கு முழுமை திட்டம் தயாரிக்கப்பட்டு அரசாணை எண்.144 மி.வ.ந.வ.துறை நாள்:04.06.2004-இல் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது. பொது மக்களின் ஆட்சேபணை மற்றும் ஆலோசனைகள் பெறுவது சம்மந்தமாக தமிழக அரசிதழ் 5-ஆம் தேதி ஏப்ரல் 2006 இல் பிரசுரிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.**

38) கட்டி அனுமதி அளிக்கப்பட்ட விவரம் (2019-2020):-

| கட்டிட அனுமதி கோரி வந்தவை | அனுமதி அளிக்கப் பட்டவை | அனுமதி மறுக்கப் பட்டவை | திருப்பி அனுப்பப் பட்டவை | மேல் முறையீடு செய்தவை |
|---|---|---|---|---|
| **159** | **153** | **6** | **0** | **0** |

01.04.2019 முதல் 31.03.2020 வரை 153 கட்டிட உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளது.

39) வரை கடப்புகள்:-

**1. ஆண்டு தொடக்கத்தில் இந்த வரைக் கடப்புகள் - இல்லை**

**2. அறிக்கையாண்டில் கண்டுபிடிக்கப்பட்டவை - இல்லை**

**3. மொத்தம் - இல்லை**

**4. முடிவுற்றவை - இல்லை**

5. **ஆண்டு இறுதியில் நிலுவை - இல்லை**

40) பொது வருவாய்:-

**வருவாய் பிரிவு:-**

**சொத்துவரி:-**

**அ) பிரிவு 81-ன் கீழ் சொத்துவரி அரையாண்டிற்கு:-**

1. பொதுகாரியங்களுக்கு வரி - **10%**
2. குடிநீர் வினியோகம் மற்றும் கழிவுநீர் வரி - 5%
3. கல்வி - 2.5%
4. நூலகவரி - 1.5%

மொத்தம் - 19%

**ஆ) பிரிவு 81(3)-ன் கீழ் காலிமனை வரி:-**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 2019-2020 நிதியாண்டில் மொத்த சொத்து வரி 20,797 ஆகும். அதன் கேட்பு 356.81 இலட்சமாகும். இதில் 207.42 இலட்சம் வசூலாகி 149.39 இலட்சம் நிலுவையில் உள்ளது. 662 காலிமனை வரி எண்ணிக்கையாகும். அதன் கேட்பு 24.37 இலட்சமாகும். அதன் கேட்பு இலட்சமாகும். இதில் 10.98 இலட்சம் வசூலாகி 13.39 இலட்சம் நிலுவையில் உள்ளது.

**கேட்பு, வசூல் மற்றும் நிலுவை விவரம் 2019-2020**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | வரியினம் | கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|---|---|
| 1 | சொத்துவரி | 356.81 | 207.42 | 149.39 |
| 2 | தொழில்வரி | 85.50 | 36.11 | 49.39 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | வரியில்லா இனம் | 158.03 | 144.58 | 13.45 |
| | **மொத்தம்** | **600.34** | **388.11** | **212.23** |

நடப்பாண்டில் அதிக சதவீதம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**41) கடன்கள்:-**

முந்தைய ஆண்டுளில் பெறப்பட்ட கடன்களின் அசல் மற்றும் வட்டி உரிய காலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் கடன் தொகை தவணை முறையில் நிலுவையின்றி செலுத்தப்பட்டு வருகிறது.

**42) முதலீடுகள்:-**

1. **அறிக்கையாண்டில் தொடக்க மூலதனம் - இல்லை**
2. **முதலீடு செய்தது - இல்லை**
3. **முதலீடு திரும்ப பெற்றது - இல்லை**
4. **இறுதியில் இருந்த முதலீடு - இல்லை**

இந்த நிதியாண்டில் வட்டியுடன் சேர்த்து முதலீடு தொகை ரூ./- வங்கியில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

**43) கணக்கு தணிக்கை:-**

அறிக்கையாண்டில் 2018-2019 முடிய கணக்குகள் தணிக்கை முடிவுற்றுள்ளது. தணிக்கை அறிக்கை பெறப்பட்டுள்ளது.

அறிக்கையாண்டு தொடக்கத்தில் நிலுவையில் தணிக்கை தடைகள் இருந்தது. அறிக்கையாண்டில் தடைகள் உயர்மட்ட குழு

கூட்டத்தில் நீக்கம் செய்யப்பட்டது. மேலும், நிலுவை உள்ள தணிக்கை தடைகளை நீக்கம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2019-2020 ஆம் நிதியாண்டின் ஆரம்பத்தில் பொது நிதியில் 156 குடிநீர் நிதியில் 112 ஆரம்ப கல்விநிதியில் 28 ஆக மொத்தம் 296 தணிக்கைத் தடைகள் நிலுவையில் இருந்தது. 31.03.2020 ஆம்தேதிய நிலையில் மொத்தம் 296 தணிக்கைத்தடைகள் மட்டுமே நிலுவையில் இருந்தது.

**44) கொடுக்கப்பட வேண்டிய பாக்கி விவரம்:-**

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1 | WSPF | 1962.00 |
| 2 | TNUDP சாலை மற்றும் வடிகால் | 3228.00 |
| 3 | TNUIFSL | 2056.00 |
| 4 | HUDCO | 2480.00 |
| | **மொத்தம்** | **9735.00** |

45) போக்குவரத்து - பேருந்து சேவை:-

**இந்நகராட்சியில் இரண்டு பேருந்து நிலையங்கள் பராமரித்து வருகிறது. அரசு போக்குவரத்து கழக பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் பொது மக்களின் போக்குவரத்துக்கு போதுமானதாக இருந்தது.**

46) சந்தைகள், வண்டிமேடுகள், பேருந்து நிலையம் மற்றும் தொலைகாட்சி பெட்டி விவரம்:-

**அறிக்கையாண்டில் மேற்படி தலைப்பின் கீழ் பெறப்பட்ட வருவாய் கீழே குறிக்கப்பட்டுள்ளது.**

| வ.எண் | இனம் | 2019-2020 |
|---|---|---|
| 1 | சந்தைகள் மற்றும் கடைகள் | 1,13,69,912 |
| 2 | பேருந்து நிலையம் | 8,30,000 |
| 3 | ஆடு அடிக்கும் சாலை | 3,83,000 |
| 4 | கட்டண கழிப்பிடம் | 15,10,350 |

**இந்நகராட்சியில் நிதி நிலை கடந்த ஆண்டுகளில் மிகவும் பற்றாக்குறையாகவும், செலுத்தப்பட வேண்டிய கடன்கள் பிற்கால சேமிப்பு நிதி தொகைகள் நகர மற்றும் கைத்தறி இலாக்காக்களுக்கு செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகள் தொடர்ந்து அறிக்கையாண்டில் நிலுவையக இருந்து.**

**46) தேர்தல் :**

2011 ஆம் ஆண்டில் மக்கள் தொகை அடிப்படையில் புதியதாக வார்டு மறுவரையறை பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பொதுமக்கள், அரசியல் கட்சியினரின் கருத்துக்கள் பெறப்பட்டு நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**நிர்வாகம் :**

01.04.2019 முதல் 31.03.2020 வரை திரு-இரா.சூரியபிரகாஷ் மேலாளராக பணியாற்றியுள்ளார்.

பொதுப்பிரிவு மற்றும் வருவாய் பணியாளர்களின் செலவுகள் விதிகளில் குறிப்பிட்டுள்ள விகிதங்களுக்குட்பட்டு இருந்தது. அறிக்கையாண்டில் கோவை நகரியியல் பயிற்சி நிறுவனத்திற்கு நகராட்சி பங்கு தொகையாக 2018-2019 ஆம்ஆண்டிற்கு ரூ.50,000/- 18.11.2019 அன்று செலுத்தப்பட்டுள்ளது. ஊழியர் நியமனம் மற்றும் தண்டனை வழங்குதல் சம்மந்தமாக உள்ள பணி விதிகள்யாவும் வழுவாமல் கடைபிடிக்கப்பட்டது.

அறிக்கையாண்டில் நகராட்சி பணியாளர்களின் மொத்த சம்பள செலவு கீழ்க்கண்டவாறு

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1 | பொது பிரிவு | 1112.27 |
| 2 | குடிநீர் பிரிவு | 58.49 |
| | மொத்தம் | 1170.76 |

**47) தகவல் மையம் :**

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் இயங்கும் தகவல் மையத்தில் அனைத்து பிரிவுகளில் உள்ள விவரங்களை உடனுக்குடன் கொடுப்பதுடன் கீழ்க்கண்டவாறு படிவங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பிறப்பு சான்றிதழ் விண்ணப்பங்கள் | 2,377 |
| 2 | இறப்பு சான்றிதழ் விண்ணப்பங்கள் | 654 |
| 3 | கட்டிட அனுமதி விண்ணப்பங்கள் | 183 |
| 4 | சொத்துவரி பெயர் **மாற்ற** விண்ணப்பங்கள் | 362 |

| 5 | தொழில் உரிமம் விண்ணப்பங்கள் | 271 |
|---|---|---|

மேலும், அனைத்து சான்றிதழ்கள், கட்டிட உரிமங்கள், சொத்துவரி பெயர் மாற்ற உத்தரவுகள் ஆகியவை தகவல் மையம் மூலம் பொது மக்கள் பெற வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒப்பந்தப்புள்ளி அளிப்பதற்கான விண்ணப்பங்கள் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடம் அளிப்பதற்கு தகவல் மையத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது. மேற்படி தகவல் மையம் பொதுமக்களுக்கு சேவை செய்கின்ற வகையில் நல்ல முறையில் செயலாற்றி வருகிறது.

**48) புதிய கணக்கு முறை :**

அரசாணை எண்.3 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 12.01.2000-ன்படி நகராட்சிகளில் 01.04.2000 முதல் புதிய கணக்கு முறை அமுல்படுத்தி ஆணையிடப்பட்டுள்ளது. புதிய கணக்கு முறைப்படி ஐந்தொகை கணக்குகளாக வருவாய் கணக்கு, மூலதனக்கணக்கு, கல்விநிதிகணக்கு, குடிநீர்கணக்கு மற்றும் நூலகவரித் தொகை கணக்கு ஆகியன பராமரிக்கப்படுகிறது. ஏற்கனவே இருந்த ஒரு பதிவு (Single Entry System) முறை மாற்றப்பட்டு, இருபதிவு முறை (Double Entry System) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், நகராட்சிக்கு வரப்பெற வேண்டிய வருவாய் குறித்து இனவாரியாகவும் (Assest) மற்றும் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகைகள் குறித்தும் கணக்கீடு (Liability) செய்து நிலைஅறிக்கை (Balance Sheet) தயார் செய்யப்படுவதால், நகராட்சியின் நிதிநிலைமை குறித்து எளிதில் தெளிவாக அறிந்து கொள்ள இயலும் வகையில் புதிய கணக்கு 01.04.2000 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகராட்சி

நிர்வாக ஆணையரால் ஒருங்கிணைந்த இணையவழி மென்பொருள் (CWBS) தயாரிக்கப்பட்டு இந்நகராட்சியில் 01.01.2017 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**கணினிமயமாக்குதல் (E- GOVERENCE) :**

சொத்துவரி, தொழில்வரி, அபாயகரமானதும் அருவருக்கத் தக்கதுமான தொழில் உரிமகட்டணம், கட்டிட அனுமதி, பிறப்பு, இறப்பு சான்றிதழ் போன்றவற்றினை கணினிமயமாக்கும் இ-கவனென்ஸ் இந்நகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**49) பொது :**

**மூலதனக் கணக்குகள் :**

இவ்வாண்டில் எல்லா கணக்குகளின் கீழ் வரவு, செலவு முறையே 2019 - 2020

(ரூபாய் இலட்சத்தில்)

| விபரம் | வருவாய் நிதி | குடிநீர் நிதி | கல்வி நிதி |
|---|---|---|---|
| வரவு | 2,563.69 | 170.64 | 28.74 |
| செலவு | 2,713.15 | 216.99 | 22.09 |

அறிக்கையாண்டில் அரசிடமிருந்து கீழ்க்கண்ட மான்ய திட்டங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1 | ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (JUDM) | 372.60 |
| 2 | கசடு கழிவு மேலாண்மை - FSTP | 320.00 |
| 3 | தூய்மை இந்தியா திட்டம் | |
| 4 | இயற்கை இடர்பாடு - பேரிட மேலாண்மை | 25.00 |

| | | |
|---|---|---|
| 5 | 14வது நிதிக்குழு | 20.00 |
| 6 | நகர்ப்புற வாழ்வாதார திட்டம் NULM | 268.00 |

**மூலதன செலவுகள் :**

| | | |
|---|---|---|
| 1 | சாலைகள் | 463.030 |
| 2 | மின்சாதனங்கள் | 61.90 |
| 3 | தளவாடங்கள் | 11.03 |
| 4 | வாகனங்கள் | |
| 5 | வடிகால் மற்றும் கல்வெட்டு | 90.16 |
| 6 | கட்டிடங்கள் | 10.98 |
| 7 | ஆரம்ப கல்வி கணக்கு | |
| 8 | குடிநீர் கணக்கு | |
| 9 | திடக்கழிவு மேலாண்மை | 248.94 |

**50) தொழில்வரி :**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 2019-2020 நிதியாண்டில் மொத்த தொழில்வரி 1472 ஆகும். அதன் கேட்பு 85.50 இலட்சமாகும். இதில் 36.11 இலட்சம் வசூலாகி 49.39 இலட்சம் நிலுவையில் உள்ளது.

நடப்பாண்டில் அதிக சதவீதம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**51) சத்துணவுதிட்டம் :**

15.09.1982 ஆம் ஆண்டிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் சத்துணவு திட்டம் தொடங்கப்பட்டு மாணவ / மாணவிகளுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. 17 சத்துணவு மையங்கள் உள்ளன. ஒன்ற முதல் பத்தாம் வகுப்பு வரையிலுள்ள மாணவ / மாணவிகள் பயனடைகின்றனர். ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு அமைப்பாளர், ஒரு உதவியாளர் நியமிக்கப்பட்டு சிறந்த முறையில் சத்துணவு பணிகள் நடைப்பெற்றுள்ளது. இத்திட்டம் அரசு ஆணைகளின்படி, சமூகநல துறை கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது .இத்திட்டத்தின் கீழ் தினசரி சராசரியாக 739 பிள்ளைகள் பயன் பெறுகின்றனர். வாரத்திற்கு ஐந்து முட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது.

**52) அம்மா உணவகம் :**

அறிக்கையாண்டில் நகராட்சி கட்டுப்பாட்டில் ஒரு அம்மா உணவகம் இயங்கி வருகிறது. அரசு விதிகளின்படி, தரமான உணவு தயாரித்து நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

**இடம் : குடியாத்தம்** — **ஆணையாளர்**

**நாள் : 29.06.2020** — **குடியாத்தம் நகராட்சி.**

<u>குடியாத்தம் நகராட்சி</u>

<u>நகரமன்ற தீர்மான எண்.67 நாள் : 29.06.2020-ன் உண்மை நகல்</u>

இந்நகராட்சியின் 2019-2020 ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கை தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுலவக குறிப்பு :</u> அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.சி1/1369/2020)

நகரமன்ற தீர்மான எண்.67 அனுமதிக்கப்பட்டது நாள் : 29.06.2020

(ஒம்)எச்.இரமேஷ்,
ஆணையாளர் / தனி அலுவலர்
குடியாத்தம் நகராட்சி

-/ உண்மை நகல் /-

ஆணையாளர்,
குடியாத்தம் நகராட்சி.